[முனைவர் டி.ஆர்.பி. ராஜா] [2024 ஜூன் 27

இங்கே குறிப்பிட்டதைப்போல, அடுத்த கட்டமாக, நிச்சயமாக தஞ்சாவூருக்கும் மிகப் பெரிய ஒரு நூல் நிலையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கையுடன் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ், திருச்சியில் உலகத்தரம் வாய்ந்த நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். முதலில், மதுரையில் பன்னாட்டு தரத்தில் நூலகம் திறந்தார்கள். அதற்குப் பின்னர், 2022 என்று நான் நினைக்கிறேன். திருநெல்வேலிக்கு நூலகம் தந்தார்கள். தென்னிந்தியாவில் தோன்றிய நாகரிகம் பொருநை நாகரிகம். அந்த இடத்திலே ஒரு நூலகம் வேண்டுமென்று கேட்டேன். எல்லோரும் கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறக்க மாட்டார்கள். கோயம்புத்தூருக்குக் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக, சேலத்திற்கு அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் வரப் போகிறது. அதோடு சேர்த்து திருநெல்வேலிக்கும் வருமென்று முழுமையாக நம்பி, பட்ஜெட்டை எதிர்பார்க்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

சுதந்திரப் போராட்ட தியாகி திரு. ஜி.எஸ். லக்ஷ்மண் ஐயர் மற்றும் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. எஸ்.கே. பரமசிவம் ஆகியோருக்கு சிலை அமைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த தலைவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் ஏதோ ஒன்றைப் பேச முற்படுகிறார்கள். தயவுசெய்து, அவையில் தாங்கள் பேச வேண்டியதைப் பேசவும்.

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், அருமைத் தலைவி இந்திரா காந்தி அவர்களுடைய சிலையினை சென்னையிலே அமைக்கப் போகிறோம் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

2024 ஜூன் 27] [திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்]

முற்பகல் 10-55

இந்த அறிவிப்பின்மூலம், தன்னுடைய உள்ளம் பெரிது, யாருக்கும் நான் பகைவன் அல்ல; எல்லோருக்கும் நல்லவற்றைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு இருக்கின்றேன் என்பதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லாமலேயே வெளிக்காட்டியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், அவருக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த airport*–ஐ பற்றி மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள் பேசினார்கள். (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் பேசினார்கள்.*

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் எப்போதுமே பல விஷயங்களைச் சுட்டிக்காட்டக்கூடியவர். ஒன்று கடிதம்மூலம் சொல்வார், இல்லையென்றால் தொலைபேசிமூலம் பேசுவார். (சிரிப்பு) அவர் இங்கே சேலத்தில் உள்ள விமான நிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று சொன்னார். அது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். ஆனால், சேலம் விமான நிலையத்தைப் பற்றி ஆரம்பத்திலிருந்து சில காலம் முதல் இன்றுவரைக்கும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 6 மாதம் ஓடும், திரும்பவும் மூடிவிடுவார்கள். காரணம், பயணிகள் அதிகமாக வருவது இல்லை என்ற காரணத்தினால்தான். ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், அது பயனுள்ள விமான நிலையமாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அதைக் கொஞ்சம் நகர்த்தி ஈரோட்டிற்கும், சேலத்திற்கும் நடுவிலே வைப்பீர்களென்றால், (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை, இப்போது அது ஓமலூரில்தான் இருக்கின்றது.*

சேலத்திலிருந்து ஓமலூருக்கு செல்வதென்றால் ½ மணி நேரம், ஒரு மணி நேரம் ஆகும். அதைக் கொஞ்சம் நகர்த்தி சங்கரியிலே வைத்தால், (சிரிப்பு) நாமக்கல் மக்களும், திருச்செங்கோடு மக்களும் அதை உபயோகப்படுத்த முடியும். கொங்கு

மண்டலத்தில் இருக்கின்ற பாதி ஏரியாவை அது cover செய்யும். குறிப்பாக, எங்களுடைய ஈரோட்டுக்காரர்களுக்கு கொஞ்சம் அது சௌகரியமாக இருக்கும். ஒரு பரந்த எண்ணத்தோடு நீங்களும் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். (சிரிப்பு) ஆகவே, நான் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தக் கருத்துக்கு கொஞ்சம் செவிசாய்க்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

உலகத்தரம் வாய்ந்த மாபெரும் கலைஞர் நூலகத்தை திருச்சியிலே 4-வது நூலகமாக, மிகப் பெரிய நூலகமாகக் கொண்டுவருவது என்பது மிகப் பெரிய உபயோகமான ஒரு திட்டம். அதை நான் வரவேற்கின்றேன்.

அதேநேரத்தில், கோயில்களைக் கட்டுவதைவிட நூலகங்கள் கொண்டுவருவது அவசியம் என்று ஈரோட்டிலிருந்துதான் குரல்கள் வந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த ஈரோட்டிற்கு ஒரு நூலகத்தை, எப்படி மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் திருச்சிக்கு கேட்டாரோ, அதேபோல், ஈரோட்டிற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், மாண்புமிகு அமைச்சராக இருக்கின்ற திரு. சு. முத்துசாமி அவர்கள், ஈரோட்டிலே கிடைக்கின்ற இடங்களில் எல்லாம் நூலகத்தை ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றார். அங்கே கலைஞர் அவர்களின் சிலை இருக்கின்றது; பெரியார் அவர்களின் சிலை இருக்கின்றது; அண்ணா அவர்களின் சிலை இருக்கின்றது; அம்பேத்கர் அவர்களின் சிலை இருக்கின்றது; அந்த இடங்களிலே கீழே ஓர் இடத்தை உருவாக்கி, ஒரு நூலகத்தை ஏற்பாடு செய்து, பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகளுக்கு தேர்வு எழுதுகின்ற சமயத்தில் உபயோகமாக இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல, ஈரோட்டிலே கலைஞர் அவர்களுடைய இன்னொரு சிலை இருக்கின்றது. ஊருக்கு மத்தியில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் தேர்தல் நேரத்தில் பணி செய்த அந்த இடத்தில் கலைஞர் அவர்களுடைய சிலை இருக்கின்றது. அங்கே கொஞ்சம் இடம் இருக்கின்றது. அதையும் நூலகமாக மாற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்

2024 ஜூன் 27] [திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்]

திரு. சு. முத்துசாமி அவர்கள் முயன்று கொண்டிருக்கின்றார்கள். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். கோபிசெட்டிபாளையத்தில் வாழும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, கவன ஈர்ப்புத் தீர்மானமாக மட்டும் எடுக்கவில்லை. சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாகவும் எடுக்கவில்லை. நீங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தத் தகவலை, தகவல் கோருகின்ற முறையில் நீங்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றீர்கள். நன்றி. அதில் ஏதும் பேசவேண்டியது இருந்தால் பேசிவிடுங்கள். இல்லை, பேச வேண்டியது இருந்தால் பேசி முடித்துவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். ஏற்கெனவே காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து உங்களிடம் ஒரு கோரிக்கை இருக்கிறது என்று சொன்னதும், நல்ல பதில் கிடைக்கும் என்று நினைக்கிறேன். ஏதோ ஒரு நல்ல* direction-*ல் போகிறமாதிரி தெரிந்தது.*

முற்பகல் 11-00

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: *கிடைக்கக்கூடிய பதில் நல்ல பதிலாகத்தான் இருக்கும். மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். கோபிசெட்டிபாளையத்தில் வாழ்ந்து மறைந்த காந்தியவாதியும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நண்பருமாகிய சுதந்திரப் போராட்ட தியாகி திரு. ஜி.எஸ். லக்ஷ்மண் ஐயர் அவர்களுக்கு கோபியில் ஒரு சிலையை நாம் அமைத்தாக வேண்டும். அதற்கு தமிழக அரசின் உத்தரவினை நான் எதிர்பார்க்கின்றேன்.*

அதுமட்டுமல்ல, காந்தி அவர்களை திரு. லக்ஷ்மண் ஐயர் அவர்கள் சந்தித்தவேளையில், கோபியிலேயே மிகப் பெரிய

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

பணக்காரராக இருந்தவர் திரு. லக்ஷ்மண் ஐயர். அப்போது காந்தி சொல்கின்றார்; பட்டியலின மக்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும், அவர்கள் படிப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, அவருக்குக் கட்டளையிட்டபோது, அவர் அங்கே ஒரு விடுதியை உருவாக்கி, பள்ளிக்கூடத்தை உருவாக்கி, அங்கேயிருக்கின்ற பட்டியலின ஏழையெளிய மக்களையெல்லாம் அழைத்து அவர்களுக்கு அங்கே இருக்க இடம், உணவு, உடை கொடுத்து, கல்வியும் கொடுத்தார். அது இப்போதும், அவர் இறந்த பிறகும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மிகப் பெரிய நிலச்சுவான்தாரராக இருந்த அவர், கடைசியிலே மிகவும் ஏழ்மையான நிலையிலே இறந்தார். அப்படிப்பட்டவருக்கு நாம் ஒரு சிலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். கடைசியாக ஒன்று.

அதேபோல், வெண்மைப் புரட்சி இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் மிகச் சிறப்பாக திரு. வர்கீஸ் குரியன் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டபோது, பால் கூட்டுறவுச் சங்கத்தை அங்கே ஆரம்பித்தார்கள். தமிழகத்திலே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.கே. பரமசிவம் அவர்கள் 1961-லே ஈரோட்டிலே அதை ஆரம்பித்து, சித்தோடு பால் பண்ணையை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். ஆகவே, சித்தோடு பால் பண்ணை வளாகத்தில் திரு. எஸ்.கே. பரமசிவம் அவர்களுக்கு சிலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் பேரியக்கத்தின் ஈரோடு (கிழக்கு) தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் இரண்டு விஷயங்கள் குறித்து இங்கே அவையின் கவனத்தை ஈர்த்திருக்கின்றார்கள்.

கோபிசெட்டிபாளையத்தில் வாழ்ந்த தியாகி திரு. லக்ஷ்மண் ஐயர் அவர்கள் இரண்டு முறை நகர்மன்றத் தலைவராக

2024 ஜூன் 27]   [திரு. மு.பெ. சாமிநாதன்]
பணியாற்றியவர் மட்டுமல்ல; ஏழையெளிய மக்களுக்காக, பட்டியலின மக்களுக்காகக் குரல் கொடுத்தவர், உழைத்தவர், ஒரு தியாகி என்பதை நான் அறிவேன். ஏற்கெனவே, நான் ஈரோடு மாவட்டத்தில் கழகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவரைப் பற்றி அறிந்தது மட்டுமல்ல, ஓராண்டுக் காலம் கோபிசெட்டிபாளையத்திலேயே பள்ளிப் படிப்பைப் படித்தவன் என்கிற முறையில் அவரை நன்கு அறிந்தவன் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். அந்தத் தியாகிக்கு சிலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், அதேபோல, கோபிசெட்டிபாளையத்தை உள்ளடக்கிய திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. சுப்பராயன் அவர்களும் இதே கோரிக்கையை கடிதம் மூலமாக வைத்திருக்கின்றார்கள்.

அதேபோல, வெண்மைப் புரட்சிக்கு ஈரோடு மாவட்டத்தில் வித்திட்ட திரு. எஸ்.கே.பி. என்கிற திரு. எஸ்.கே. பரமசிவம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர். அவரையும் நான் நன்கு அறிவேன். அவரின் 101-வது வயதிலேகூட அவரைச் சந்திக்கின்றபோது, பல்வேறு விஷயங்களை என்னிடத்திலே அவர் பகிர்ந்து கொண்டவர். ஈரோடு மாவட்டத்தில் அவர் ஒரு மூத்த அரசியல்வாதி. சித்தோடு பால்வள ஒன்றியத்தில் அவரின் சிலை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக, இவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, எதிர்காலத்தில் சிலைகள் அமைப்பதற்கும், நிதிநிலைமைக்கேற்ப, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்று சொன்னால், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அந்த வழியில்தான் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்களும் ஆட்சி செய்தார்கள். இன்றைக்கும் திராவிட மாடல் ஆட்சி செய்துகொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அந்த வழியில்தான் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உதாரணம்தான், சென்னையிலே முன்னாள் அமைச்சர், நாவலர் என்று மக்களால் அழைக்கப்பெற்ற, மரியாதைக்குரிய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கும் சிலை அமைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எனவே, இதையும் எதிர்காலத்தில் நிச்சயம் பரிசீலிப்போம். நிதிநிலைமைக்கேற்ப அவை அமைக்கப்படும்.